உ

கடவுள் துணை.

சதுரகிரி

அறப்பளீசுரசதகம்.

அம்பலவாணக்கவிராயர்

அருளிச்செய்தது.

இஃது

சரவணபுரம்

சண்முகமுதலியாரவர்களால்

பார்வையிடப்பட்டு.

புரசைப்பாக்கம்

ஏழுமலைப்பிள்ளையவர்களது

விவேகவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

யுவ ௵.

உ

சிவமயம்.

அறப்பளீசுரசதகம்.

காப்பு.

வெண்பா.

உம்பர்கோனெம்பெருமா னெங்கறப்பளீசுரன்மேற் - ❊
பைம்பொருள்சேருஞ்சதகம் பாடவே-யம்புவியோர் - ❊
ஆக்குந்திருக்கையுளா னன்புடையார்கின்பருளின்- - ❊
சாக்குந்துதிக்கையுளான் காப்பு. - - - ❊

உயர்பிறப்பு.

கடலுலகில்வாழுமுயி ரெழுபிறப்பினுண் மிக்க காட்சிபெறுநரசன்மமாய்க், கருதப்பிறத்தலரி திதினுமுயர்சாதியிற் கற்புவழிவருதலரிது, வடிவமுடனவயவங் குறையாதுபிழையாது வருதலதனினுமரிது, வந்தாலுமிதுபுண்ணிய மிதுபாவமென்றெண்ணிமாசில்வழிநிற்றலரிது, தேடியதனவானுத லரிததினிரக்கமுள நெஞ்சினனாதலரிது, நேசமுடனுன்பதத் தன்பனாய்வருதலிந் நீணிலத்தினுமரிதாம், அடியவர்க்கமுதமேமேழைபூபதிபெற்றவதிபனே மதருமைமதவேள், அநுதினமுமனதிநினை தருசதுரகிரிவளரறப்பளீசரதேவனே. (க)

மனையாட்டிசிறப்பு.

கணவனுக்கினியளாய் மிர்துபாஷியாய்மிக்க கமலைநிசரூபவதியாய், காய்சினமிலாளுவாய் நோய்பழியிலாததோர் கால்வழியில் வந்தவளுவாய், மணமிக்கநாணமடமச்சம்பயிர்ப்பென்னவருமினியமார்க்கவதியாய், மாமிமாமற்கிதஞ் செய்பவளுமாய்வாசல் தருவிருந்தோம்புபவளாய், இணையின்மகிழ்நன்சொல்வழி நிற்பவளுமாய்வந்தி யென்பெயரிலாதவளுமாய், இரதியெனவேலீலை புரிபவளுமாய்பிறர்த மில்வழிசெலாதவளுமாய், அணியிழையொருத்தியுண் டாயினவள்கற்புடைய ளாகுமெமதருமைமதவேள், அநுதினமுமனதிநினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (உ)

நன்மக்கட்பேறு.

தங்குலம்விளங்கிடப் பெரியோர்கள்செய்துவரு தருமங்கள் செய்துவாலும், தன்மமிகுதானங்கள் செய்தலுங்கனமேயாக சா

தகனெனெப்படுதலும், மங்குதலிலாததன் றந்தைதாய்குருமொழி மறாதுவழிபாடுசெயலும், வழிவழிவருந்தமது தேவதாபத்திபுரிமார்க்கமுந்தீர்க்காயுளும், இங்கிதகுணங்களும்வித்தையும்புத்தியுமீகையுஞ்சன்மார்க்கமும், இவையெலாமுடையவன்புதல்வனுமவனையேயீன்றவன்புண்ணியவானும், அங்கசவிரோதியே சோதியே நீதிசேரரசனெனமதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகி.()

சகோதரவொருமை.

கூடப்பிறந்தவர்க்கெய்துதுயர்தமதுதுயர்கொள்சுகந்தஞ்சுகமெனக், கொண்டுதாந்தேடுபொரு ளவர்தேடுபொருளவர்கொள்கோதில்புகழ்தம்புகழெனத், தேடுற்றவவர்நிந்தைதந்நிந்தைதந்தவந்தீதிலவர்தவமாமெனச், சிவனென்றுடல்வேறிவர்க்கென்னவைந்தலைச்சீறரவமணிவாய்தொறும், கூடுற்றவிரையெடுத்தோருடனிறைத்திடுங்கொள்கைபோற்பிறவின்றியே, கூடிவாழ்பவர்தம்மையேசகோதரெனக்கூறுவதுவேதருமமாம், ஆடிச்சிவந்தசெந்தாமரைப்பாதனேயண்ணலெமதருமைமதவேள், அநுதினமுமனதிநினை.(௫)

சற்குருவியல்பு.

வேதாந்தசித்தாந்த வழிதெரிந்தாசார விவரமெய்ஞ்ஞானபூர்
வித்யாவிசேஷசற் குணசத்யசம்பன்ன விரவைராக்யமுக்ய [ண
சாதாரணப்பிரிய யோகமார்க்காதிக்ய சமாதிநிஷ்டானுபவராய்ச்
சட்சமயநிலைமையும் பரமந்த்ரபரதந்த்ர தருமமும்பரசமயமும்
நீதியினுணர்ந்துதத் துவமார்க்கராய்ப்பிரமநிலைகண்டுபாசமிலராய்
நித்தியானந்தசை தன்னியராயாசையறு நெறியுளோர்சற்குருவராம்
ஆதாரமாயுயிர்க் குயிராகியெவையுமா மமலவெமதருமைமதவேள்
அநுதினமுமனதிநினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே.(௫)

தன்மாணுக்கரியல்பு.

வைதாலுமோர்கொடுமை செய்தாலுமோசீறி மாறுஇகழ்ந்தாலுமோ, மனதுசற்றுகிலுங்கோணாதுநாணாதுமாதாபிதாவெனக்குப், பொய்யாமனீயென்று கனிவொடும்பணிவிடை புரிந்துபொருளுடலாவியும், புனிதவுன்றனதெனத்தத்தஞ்செய்திரவுபகல் போற்றிமலரடியில்வீழ்ந்து, மெய்யாகவேபரவியுபதேசமதுபெறவிரும்புவோர்சற்சீடராம், வினைவேரறும்படி யவர்க்கருள்செய்திடுவதேமிக்கதேசிகரத்துடன், ஐயாபுரம்பொடிபடச்செய்தசெம்மலையண்ணலெமதருமைமதவேள், அநுதினமுமனதிநினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௬)

பொருள்செயல்வகை.

புண்ணியவசத்தினாற் செல்வமதுபெறவேண்டும் பொருளைரட்சிக்கவேண்டும், புத்தியுடனதுவொன்று நூறாகவேசெய்துபோதவும்வளர்க்கவேண்டும், உண்ணவேண்டும்பின்பு நல்லவஸ்திராபரண முடலிற்றரிக்கவேண்டும், உற்றபெரியோர்கவிஞர் தமராதுலர்க்குதவி யோங்குபுகழ்தேடவேண்டும், மண்ணில்வெகுதருமங்கள் செயவேண்டுமுயர்மோக்ஷ வழிதேடவேண்டுமன்றி, வறிதிற்புதைத்துவைத் தீயாதபேர்களே மார்க்கமறியாக்குருடராம், அண்ணலேகங்கா குலத்தலைவன்மேழைதரு மழகனெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. ()

தீவழிவிலக்கு.

வஞ்சகர்தமைக்கூடி மருவொணாதன்பிலார் வாசலிற்செல்லொணாது, வாதெவரிடத்திலும் புரியொணாதறிவிலா மடையர்முன்னிற்கொணாது, கொஞ்மேனுந்தீது செய்யொணாதொருவர்மேற் குற்றமென்றெண்ணொணாது, கோதையர்களோடுபெரி சாசஞ்செய்யொண்ணாது கோளுரைகள்பேசொணாது, நஞ்சுதருமரவொடும் பழகொணாதிருள்வழி நடந்துதனியேகொணாது, நதிபெருக்காகினதினீஞ்சல்செய்யொண்ணாது நல்வழிமறக்கொணாது, அஞ்சாமலரசர்முன் பேசொணாதிவையெலாமறியுமெமதருமைமதவேள், அ.று. ()

ஒன்றற்கொன்றழகுசெய்வன.

வாழ்மனைதனக்கழகு குலமங்கைகுலமங்கை வாழ்வினுக்கழகுசிறுவர், வளர்சிறுவருக்கழகு கல்விகல்விக்கழகு மாதிலந்துதிசெய்குணமாம், சூழ்குணமதற்கழகு பேரறிவுபேறிரவு தோன்றிடிலதற்கழகுதான், தூயதவமேன்மையுபகாரவிரதம்பொறுமை சொல்லறியபெரியோர்களைத், தாழ்தல்பணிவிடைபுரிதல் சீலநேசங்கருணைசாற்றுமிவையாமென்பர்காண், சௌரிமலரோனமார் முனிவர்முச்சுடரொலாஞ் சரணமெனநாட்சியெனவே, ஆழ்கடலுதித்துவருவிடமுண்டகண்டனே யண்ணலெமதருமைமதவேள், அறு. ()

ஒன்றிலாமையாற்பயன்படாதவை.

கோவிலில்லாதவூர் நாசியில்லாமுகங்கொழுநனில்லாதமடவார், குணமதில்லாவித்தை மணமதில்லாதமலர் குஞ்சரமிலாதசேனை, காவலில்லாதபயிர் பாலரில்லாதமனை கதிர்மதியிலாதவானம், கவிஞரில்லாதசபை சுதிலயையிலாதபண் காவலரிலாததேசம், ஈவதில்லாததன நியமமில்லாதசெப மிசைலவணமில்லாதவூண், இச்சையில்லாதபெண் போகநலமிவைநம்பி னேதுபலனுண்டுகண்டாய், ஆவினையாட்கொடந் தத்தவாகற்பதரு வாகுமெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீ. (௰)

ஒன்றற்கொன்றுதகாதசேர்க்கை.

ஈதலையில்லாத லோபியரிடத்திலே பொருளையருளிச்செய்ததனை, புண்ணியஞ்செய்கின்ற சற்சனரிடத்திலே பொல்லாதமிடி வைத்ததனை, நீதியகன்மூடர்க் கருந்ததியெனத்தக்க நெறிமாதரைத் தந்ததனை, நிதானமுளவுத்தமர்க் கிங்கிதமிலாதகொடு நீலியைச்சேர்வித்ததனை, சாதியிலுயர்ந்தபே ரீனர்பின்னேசென்று தாழ்ந்துபரவச்செய்ததனை, தமிழருமையறியாத புல்லர்மேற்கவிவாணர் தாம்பாடவேசெய்ததனை, ஆதரவிலாமலிப் படிசெய்ததென்சொலா யமலவெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை. (௰௧)

குலைக்கேடரியல்பு.

மாறுதகலைகற்று நிலைபெற்றசபையிலே வாயிலாதவனொருபதர், வாள்பிடித்தெதிரிவரி னோடிப்பதுங்கிடு மனக்கோழைதானொருபதர், ஏறுவழக்குரைத் தனைவருஞ்சீசீயென் றிகழநிற்பானொருபதர், இல்லாள்புறஞ்செலச் சம்மதித்தவளோ டிணங்கிவாழ்பவனொருபதர், வேறொருவர்மெச்சாது தன்னையேதான்மெச்சி வீண்பேசுவானொருபதர், வேசையர்களாசைகொண் டுள்ளவுமனையாளை விட்டுவிடுவானொருபதர், ஆறுததுயரையும்மிடியையுந்தீர்த்தருள்செயமலவெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை. (௰௨)

செயத்தக்கவை.

வாலிபந்தனில்வித்தை கற்கவேண்டுங்கற்ற வழியிலேநிற்கவேண்டும், வலைகடறிரிந்துபொருடேடவேண்டுந்தேடி வளரறஞ்செய்யவேண்டும், சீலமுடையோர்களைச் சேரவேண்டும்பிரிதல் செய்யாதிருக்கவேண்டும், செந்தமிழ்ப்பாடல்பல கொள்ளவேண்டுங்கொண்டுதியாகங்கொடுக்கவேண்டும், ஞாலமிசைபலதரும நாட்டவேண்டும்நாட்டி நன்றாய்நடத்தவேண்டும், நம்பனிணையடிபூசைபண்ணவேண்டும்பண்ணி னலுமிகுபத்திவேண்டும், ஆலமமர்கண்டனே பூதியணிமுண்டனே யனகவெமதருமைமதவேள், அ.நு. ()

மேன்மேலுயர்ச்சி.

தன்மட்டிலிரவாது சீவனஞ்செய்பவன் சாமார்த்தியமுளபுருஷனாம், சத்ததம்பதின்மரைக்காப்பாற்றுவோன் மிக்கதரணிபுகழ்தருதேவனாம், பொன்மட்டிலாமலீந்தொருநூறுபேரைப்புரப்பவன்பொருவிந்திரன், புவிமீதிலாயிரம் பேர்தமைக்காப்பாற்றுபுண்ணியவானேபிரமனாம், நன்மைதருபதினாயிரம் பேர்தமைக்காத்துரட்சிப்பவன்செங்கண்மால், நாளுமவன்மேலதிகமாகவெருபேர்க்குதவுநரனேமகாதேவனாம், அன்மட்டிலோர்குழலி பாகனேயேகனே யண்ணலெமதருமைமதவேள், அநுதினமுமனதினினைதருச. (௰௪)

செயற்கருஞ்செயல்.

நீர்மேனடக்கலா மெட்டியுந்தின்னலா நெருப்பைநீர்போற் செய்யலாம், நெடியபெருவேங்கையைக் கட்டியேதழுவலா நீளரவினைப்பூணலாம், பார்மீதுமணலைச் சமைக்கலாஞ்சோறெனப் பட்சமுடனேயுண்ணலாம், பாணமொடுகுண்டுவில கச்செய்யலா மரப் பாவைபேசப்பண்ணலாம், ஏர்மேவுகாடியுங் கடையுற்றவெண்ணெயு மெடுக்கலாம்புத்திசற்றும், இல்லாதமூடர்த மனத்தைத் திருப்பவே யெவருக்குமுடியாதுகாண், ஆர்மேவுகொன்றைபுனை வேணியாய்சுரர்பரவு மமலனேயருமைமதவேள், அறுதினமு. ()

உத்தமராவோர்.

செய்நன்றிமறவாத பேர்களுமொருவர்செய் தீமையைமறந்தபேரும், திரவியத்தரவரினு மொருவர்மனையாட்டிமேற் சித்தம் வையாதபேரும், கைகண்டெடுத்தபொருள் கொண்டுபோய்ப்பொருளாளர் கையிற்கொடுத்தபேரும், காசினியிலொருவர்செய் தருமங்கெடாதபடி காத்தருள்செய்கின்றபேரும், பொய்யென்றுநிதி கோடி வரினும்வழாதழிவு புகலாதிருந்தபேரும், புவிமீதுதலைபோகு மென்னினுங்கனவிலும் பொய்மையுரையாதபேரும், ஐயவிங்கிவரெலாஞ் சற்புருஷரென்றுலகி லகமகிழ்வதருமைமதவேள், அறுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௧௬)

இதுவுமது.

அடைக்கலமெனத்தேடி வருவோர்தமைக்காக்கு மவனேமகாபுருஷனும், அஞ்சாமலெதுவரினு மெதுபோகினுஞ்சித்த மசைவிலான்மகாதீரனும், தொடுத்தொன்றுசொன்னசொற் றப்பாதுசெய்கின்ற தோன்றலேமகாராஜனும், தூறிக்கலைக்கின்றபேர்வார்த்தை கேளாத துரையேமகாமேருவாம், அடுக்கின்றபேர்க்குவரு மிடர்தீர்த்துரட்சிக்கு மவனேமகாதியாகியாம், அவரவர்தராதர மறிந்து மரியாதைசெயு மவனேமகாவுசிதனும், அடர்கின்றமுத்தலைச் சூலனேலோலனே யமலனேயருமைமதவேள், அறுதினமு. (௧௭)

ஒன்றிலொன்றில்லாமை.

காமிக்குமுறையில்லை வேசைக்குநாணில்லை கயவர்க்குமேன்மையில்லை, கன்னமிடுகள்வருக் கிருளில்லைவிபசார கன்னியர்க்காணையில்லை, தாமெனுமயக்கசுறத் தோங்குபெரியோர்க்குவரு சாதிகுலமென்பதில்லை, தாட்சணியமுடையோர்க் கிகலில்லையெங்குமொரு சார்பிலார்க்கிடமில்லை, பூமிக்குளீயாத லோபர்க்குவளமான புகழென்பதொன்றுமில்லை, புலையர்க்குநிசமில்லை கைப்பொருளிலாததோர் புருஷருக்கொன்றுமில்லை, யாமினிதனக்குநிகர் சந்தரத்திறைவனே யன்புடையவருமைமதவேள், அறுதினமு. (௧௮)

யாக்கைநிலைமைமுதலியவை.

காயமொருபுற்புதம் வாழ்வுமலைசூழ்தரும் காட்டிலாற்றின்பெருக்காம், கருணைதருபுதல்வர்களை மனைமனைவியிவையெலாங் கானல்காட்டும்பிரவாகம், மேயபுஜபலவலுமை யிளமையழகிவையெலாம் வெயின்மஞ்சளுயிர்தானுமே, வெட்டவெளிதனில்வைத்த தீபமெனவேகருதி வீண்பொழுதுபோக்காமலே, நேயமுடனேதெளிந் தன்பொடுன்பாதத்தி னினைவுவைத்திருபோதிலும், நீர்கொண்டுமலர்கொண்டு பரிவுகொண்டர்ச்சிக்க நிமலனேயருள்புரிகுவாய், ஆயுமறிவாளர்பணி பாதனேபோதனே யண்ணலெமதருமைமதவேள், அறுதினமுமனதினினைதருசதுரகிரிவள ரறப்பளீசுர. (௰௯)

திருமங்கையிருப்பிடம்.

நற்பரிமுகத்திலே மன்னவரிடத்திலே நாகரிகர்மாமனையிலே, நளினமலர்தன்னிலே கூவிளந்தருவிலே நறைகொண்டபைந்துளவிலே, கற்புடையர்வடிவிலே கடலிலேகொடியிலே கல்யாணவாயிறனிலே, கடிநகரிடத்திலே நற்செந்நெல்விளைவிலே கதிர்பெருவிளக்கதனிலே, பொற்புடையசங்கிலே மிக்கோர்கள்வாக்கிலே பொய்யாதபேர்பாலிலே, பூந்தடந்தன்னிலே பாற்குடத்திடையிலே போதகத்தின்சிரசிலே, அற்பெருங்கோதைமலர் மங்கைவாழிடமென்ப ரண்ணலெமதருமைமதவேள், அறுதினமு. (௨௰)

மூதேவியிருப்பிடம்.

மிதமின்றியன்னம் புசிப்போரிடத்திலு மிகுபாஷையோரிடத்தும், மெய்யொன்றிலாமலே பொய்பேசியேதிரியு மிக்கபாதகரிடத்துங், கதியொன்றுமிலர்போல மலினங்கொளும்பழைய கந்தை யணிவோரிடத்தும், கடுநாயெனச்சீறி யெவரையுஞ்சேர்க்காத கன்னிவாழ்மனையகத்தும், ததிசேர்கடத்திலுங் கற்றபத்திடையிலுஞ் சார்ந்தவாட்டின்றிரளிலும், சாம்பிணமுகத்திலு மிவையெலாங்கலைபுரி தௌவைவாழிடமென்பர்காண், அதிரூபமலைமங்கை நேசனேமேழைதரு மழகனெமதருமைமதவேள், அறுதினமு. (௨௰௧)

குறைகுணமிரண்டினும்பயன்படாதவை.

குணமற்றபேய்முருங் கைத்தழைதழைத்தென்ன குட்டநோய்கொண்டுமென்ன, குலைக்கின்றநாய்மடி சுரந்தென்னசுரவாது கொஞ்சமாய்ப்போகிலென்ன, மணமற்றசெம்முருக் கதுபூத்தலர்ந்தென்ன மலராதுபோகிலென்ன, மதுரமில்லாவுவர்க் கடனீர்கறுத்தென்ன மாவெண்மையாகிலென்ன, உணவற்றபேய்ச்சுரை படர்ந்தென்னபடரா துலர்ந்துதான்போகிலென்ன, வுதவாதபேர்க்குவெகு வாழ்வுவந்தாலென்ன வோங்குமிடிவரினென்னகாண், அணியுற்றபைங்கொன்றை மாலிகாபரணனே யாதியேயருமைமதவேள், அறுதினமுமனதினினைதருசதுரகிரிவள ரறப்பளீசுரதே. (௨

குறைவுற்றுங்குணங்கொடாமை.

தறிபட்டசந்தனக்கட்டைபழுதாயினுஞ் சார்மணம்பழுதாகுமோ, தக்கபால்சுவரிடக்காச்சினும்மதுகொண்டு சாரமதுரங்குறையுமோ, திறைபட்டகதிர்மணியழுக்கடைந்தாலுமதினீள்குணமழுங்கிவிடுமோ, நெருப்பிடையுருக்கினுமடிக்கினுந்தங்கத்தினிறையுமாற்றுக்குறையுமோ, கறைபட்டபைம்புயன்மறைந்தாலுமதுகொண்டு கதிர்மதிகனம்போகுமோ, கற்றபெரியோர்மகிமை யற்பரறிகிலரெனுங்காசினிதனிற்போகுமோ, அறிவுற்றபேரைவிட்டகலாதமூர்த்தியேயையயனேயருமைமதவேள், அநுதினமுமதினினை. (உ௩)

இதற்குதவிசெய்வதுஇதுவெனல்.

வானவர்பிதிர்க்கள்முச் சுடர்மூவர்கோள்கட்கும் வாழ்வுதருமுதவிபுவனம், வளமிக்கபுவனந்தனக்குமேன்மேலுதவிவாழ்வுபெற்றிடுமன்னராம், தேனமர்நறுந்தொடையல்புனைமன்னவர்க்குதவி சேர்ந்தகுடிபடைவர்க்கமாம், சேர்குடிபடைக்குதவி விளைபயிர்பயிர்க்குதவிசீர்பெறவழங்குமழையாம், மேனிமிர்மழைக்குதவிமடமாதர்கற்பொன்று வேந்தர்தந்நீதியொன்று, வேதியரொழுக்கமொன்றிம்மூன்றுமேயென்று மிக்கபெரியோருரைசெய்வார், ஆனமர்நெடுங்கொடி யுயர்த்தவெம்மிறைவனே யதிபனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுர. (உ௪)

இதனைக்கண்டுமகிழ்வது இதுவெனல்.

தந்தைதாய்மலர்முகங் கண்டுகன்றுவப்ப தவர்தந்தசந்ததியதாம், சந்த்ரோதயங்கண்டு பூரிப்பதுயர்வாவி தங்குபைங்குமுதமலராம், புந்திமகிழ்வாயிரவி வருதல்கண்டகமகிழ்வு பொங்குதாமரைமலர்களாம், போதவும்புயல்கண்டு கண்களித்தேநடம் புரிவதுமயூரவினமாம், சிந்தைமகிழ்வாயுதவு தாதாவினைக்கண்டு சீர்பெறுவதிரவலர்குழாம், திகழ்நீதிமன்னரைக் கண்டுகளிகூர்வதிச் செகமெலாமென்பர்கண்டாய், அந்தியமைவானனைய செஞ்சடாடவியனே யமலனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுர. ()

அதுவதுவாகாமை.

உள்ளன்பிலாதபேர்தித்திக்கவேபேசி யுறவாடுமுறவுமுறவோ, உபசரித்தன்புடன் பரிமாறிடாதசோறுண்டவர்க்கன்னமாமோ, தள்ளாதிருந்துகொண் டொருவர்போய்ப்பார்த்துவரு தக்கபயிர்பயிராகுமோ, தளகர்த்தவொருவனில்லாமன்முன்சென்றிடுந் தானையுந்தானையாமோ, விள்ளாதபோகமில்லாதபெண்மேல்வரு விருப்பமும்விருப்பமாமோ, வெகுகடன்பட்டபேர்செய்கின்றசீவனமுமிக்கசீவனமாகுமோ, அள்ளாதிருங்கருணை யாளனேதேவர்தொழுமாதியேயருமைமதவேள், அநுதினமுமனதினினை. (உ௫)

நற்குணங்களுக்கிடமாகாதவர்.

வெறிகொண்டமற்கடம்பேய்க்கொண்டுகள்ளுண்டுவெங்காஞ்
சொறிப்புதனிலே, விழ்ந்துதேள்கொட்டிடச் சன்மார்க்கமெள்ள
ளவு மேவுமோமேவாதுபோல், குறைகின்றபுத்தியா யதிலற்பசாதி
யாய்க் கூடவேயிளமையுண்டாய்க், கொஞ்சமாமதிகார முங்கிடை
த்தான்மிக்க குவலயந்தனிலவர்க்கு, நிறைகின்றபுத்தியுஞ் சீலமு
மேன்மையு நிதானமும் பெரியோர்கண்மேல், நேசமும்பீகையும்
பிவைவெலாங்கனவிலு நினைவிலும்வாராதுகண்டாய், உறைகின்றசு
ருதியின்பொருளானவள்ளலேயண்ணலேயருமைமதவேள், அநுதி
னமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௨௭)

இதனால்இன்னமுறையாமெனல்.

தன்னைமுடிக்கவொண் ணாதகாரியம்வந்து தான்முடிப்போ
ன்றமையனும், தன்றலைக்கிடர்வந்த போதுமீட்டுதவுவோன் றாய்த
ந்தையென்னலாகும், ஒன்னார்செயுங்கொடுமை யான்மெலிவுவந்த
போதுதவுவோனிட்டதெய்வம், யுத்திபுத்திகள்சொல்லி மேல்வரு
ங்காரிய முரைப்பவன் குருவென்னலாம், என்றனும் வருநன்மை
தீமைதனைதன்னவே யெண்ணிவருவோன்பந்துவாம், இருதயம
றிந்துதன் சொற்படிநடக்குமவ னெவனெனினுமவனேசுதன், அ
ந்நாரமும்பணியு மெந்நாளுமேபுனையு மண்ணலே யருமைமதவே
ள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுர. (௨௮)

அவரவரிடத்துநடக்குமுறை.

மாதாபிதாவினுக் குள்ளன்புடன்கனிவு மாறாதநல்லொழுக்க
ம், மருவுகுருவானவர்க் கினியவுபசாரமுள வார்த்தைவழிபாடடக்
கங், காதார்கருங்கண்மனை யாடனக்கோசயன காலத்தினயபாஷண
ம், கற்றபெரியோர்முதியர் வருமாதுலர்க்கெலாங் கருணைசேருந்
நிதானம், நீதிபெறுமன்னவரிடத்திகபயவினைய நெறியுடையமே
ர்க்கிங்கிதம், நேயமுளதமர்தமக் ககமகிழ்வுடன்பரிவு நேயலரிடத்
தில்வயிரம், ஆதிமநூல்சொலும் வழக்கமிதுவாகுமெமதையனே
யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள. (௨௯)

குணத்தைவிட்டுக் குற்றத்தைக்கவர்தல்.

துஷ்டவிகடக்கவியை யாருமேமெச்சுவார் சொல்லுநற்கவி
யைமெச்சார், துர்ச்சனர்க்ககமகிழ்ந் துபசரிப்பார்வருந் தூயனைத்
தள்ளிவிடுவார், இஷ்டமுளதெய்வந் தனைக்கருதிடார்கருப் பெண்
ணிலோபோய்ப்பணிகுவார், ஈன்றதாய்தந்தையைச் சற்றுமதியா
வேசையென்னிலோசாலவிழ்வார், நஷ்டலாபங்களுக் குள்ள
னைபத்துவரினன்றாகவேபேசிடார், நாளுமொப்பாரியாய் வத்தபு
துறவுக்கு நன்மைபலவேசெய்குவார், அஷ்டதிசைசூழ்புவியி லே
க்குகலிமகிமைகாணத்தனேயருமைமதவேள், அநுதினமு. (௩

குணங்காண்குறி.

சற்றோர்களென்பவர்தஞ் சீலமுடனேசொலுங் கனவாக்கினாற் காணலாம், கற்புளாரென்பதைப் பார்க்கின்றபார்வையொடு கான டையினாற்காணலா ம், அற்றோர்களென்பதனையொன்றிலும்வாராத டக்கத்தினாலறியலாம், அறமுளோரென்பதைப்பூததயையென்றுநி லையதுகண்டுதானறியலாம், வித்தோங்குபயிராக்கிளைத்துவருமுடி யினால்விளையுமென்றேயறியலாம், வீரமுடையோரென்ப தோங்கி வருகைதரியவிசேஷத்தினாலறியலாம், அத்தாகுலத்தினால் குலநலந் தெரியலாமண்ணிலேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதரு சதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௯௧)

கூடிற்பயன்படல்.

செத்தைதபலகூடியொருகயிறாயினதுகொண்டுதிண்கரியையுங்க ட்டலாம், திசைந்துபலதுளிகூடியாறாயில்வாவியொடுதிரளேரிநிறை விக்கலாம், ஒத்தநுண்பஞ்சுபல சேர்ந்துநூலாயிடினுடுத்திடுங்கலை யாக்கலாம், ஒவ்வொருகோலுடன்சீலையுங்கூடினாலுயர்கவிகையாக் கொள்ளலாம், மற்றுமுயர்தண்டுலத்தொடுதவிடுமிக்கூடின்மல்குமு ளைவிளைவிக்கலாம், மனமொத்தநேயமொடுகூடியொருவர்க்கொரு வர்வாழின்வெகுவெற்றிபெறலாம், அற்றகனியைப்பொருத்தரியோ மர்தேடரியவமலனேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதரு சதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௯௨)

அதற்குவெற்றியிடம்.

கலைவலாருக்கதிகசயமதுரவாக்கிலேகாமுகர்க்கதிகசயமோ கைப்பொருளிலேவரு மருத்துவர்க்கோசயங் கைவிசேஷந்தனி லே, நலமுடையவேசையர்க்கழகிலேயரசர்க்கு நாளும்ரணசூரத்தி லே, நற்றவர்க்கதிசயமகுபுகழ்பொறையிலே ஞானவேதியர்தமக் கோ, குலமகிமைதன்னிலேவைசியர்க்கோசயங்கூறிய துலாக்கோலி லே, குற்றமில்லாதவேளாளருக்கோசயங்குறையாதகொழுமுனையி லே, அலையில்குதிரைக்குநடைவேகத்திலதிசயமாமென்பாருமை மதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதே()

ஒன்றில்லாமையாற்பாழ்படல்.

தாம்பூலதாரணமிலாததேவதுபூர்ணசந்த்ரனிகர்முகசூனியம் சற்சனரிலாததே வெகுசெனஞ்சேர்ந்துவாழ் தரும்பெரியநகர்சூ னியம், மெய்ப்பாடிலாதமன்னவர்கள்வந்தாள்வதேமிக்கதேசசூனி யம், மிக்கசற்புத்திரனில்லாததேநல்லகனவீறுசேர்கிரகசூனியம் சோம்பாதகலைவரில்லாததேவளமுடன்சொல்லுபர்சபாசூனியம் தொல்லுலகிலனைவர்க்கு மாதிரியில்லதே சுத்தசூனியமென்பர்கா ண், அப்பல்வகைத்தினைக்குக்கனையின்றருள்செய்தவந்தனேயருமை மதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதே

மூடர்தாரதம்மியம்.

பெண்புத்திகேட்கின்றமூடருந்தந்தைதாய்ப்பிழைபுறஞ்சொல்லு மூடரும், பெரியோர்கள்சபையிலே முகமேடறிவற்றதுப் பிதற்றிடும் பெருமூடரும், பண்பற்றசுற்றஞ்சிரிக்கவேயிழிவானபழிதொழில் செய்திடுமூடரும், பற்றற்றபேர்க்குமுன் பிணைநின்றுபின்புபோய்ப் பாதவித்திடுமூடரும், கண்கெட்டமாடென்ன வோடியிரவலர்மீ துகாய்ந்துவிழ்ந்திடுமூடரும், கற்றறிவிலாதமுழுமூடருக்கிவரனைவ ருங்காள் மூடரைமூடர்காண், அண்கற்றநாவலர்க் காகவேதூதுபோ மையனேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவ ளரறப்பளீசுரதேவனே. (௫௩)

இதற்கிதுவேண்டுமெனல்.

தனக்குவெகுபுத்தியுண்டாகினும்வேறொருவர்தம்புத்திகேட்க வேண்டும், தானதிகசூரனேயாகினுங்கூடவேதளசேகரங்கள்வேண் டும், தனக்கின்றவித்துவானாகினுந்தன்னினுங்கற்றோரைநத்தவேண் டும், காசினியையொருகுடையிலாண்டாலும்வாசலிற்கருத்துள்ளம ந்திரிவேண்டும், தொனிக்கின்றசங்கீதசாமார்த்தியனாகிலுஞ் சதிகொட் டவொருவன்வேண்டும், சுடர்விளக்காயினுநன்றாய்விளங்கிடத்தூண்டு கோலொன்றுவேண்டும், அனற்கண்ணனேபடிகசங்கதிர்வண்ண னேயையனேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசது ரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௫௪)

வறுமையின்கொடுமை.

மேலானசாதியிலுதித்தாலுமதிலென்னவெகுவித்தைகற்றுமென்ன மிக்கவதிரூபமொடுசற்குணமிருந்தென்ன மிகுமானியாகிலென்ன பாலானமொழியுடையனாயென்னவாசாரயானாயிருந்துமென்ன பார்மீதுவீரனொடுசூரனாயென்னபாக்கியமிலாதபோது வாலாயமாய்ப்பெற்றதாயுஞ்சலித்திடுவள்வந்தசுற்றமுமிகழுமே மரியாதையில்லாமலனைவரும்பேசுவார் மனைவியுந்தூறுசெய்வாள் ஆலாலமுண்டகனிவாயனேநேயனேயனகனேயருமைமதவேள் அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே (௫௫)

ஈனத்துவம்.

கோட்பவன்புலிமீதிலீனவனுணங்கில்லையென்னுமனைவ[illegible] ளன், இன்றபேர்தம்மையுமமேலகலைத்திடுமூடனவன் [illegible] [illegible] னன், [illegible] னன், [illegible] லைத்துதிரியப், பண்ணிமேயியில்லையென் றிடுகொடியபா[illegible] லெல்லோர்க்குமன்னன், [illegible] சமுதனேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருச[illegible] ளரறப்பளீசுரதேவனே. (௫௬)

மறைப்பனவும்வெளிப்படுத்துவனவும்.

சென்மித்தவருஷமுமுண்டானவத்தமுர்த்திக்கிரகச்சாரமும் இன்றுவருமௌஷதமுமேலானதேசிகன்செப்பியபகாமந்த்ரமும் புன்மையவமானமுந்தானமும் பைம்பொனணிபுனையுமடவாரகல்வியும்,புகழ்மேவுமானமுமிவையென்பதுர்த்தமதுபுந்திக்குளேவைப்பதே, தன்மமென்றுரைசெய்வதொன் றோர்கருத்தையுந்தன்பிணியையும்பசியையும்,தான்செய்தபாவமுமிவையெலாம்வேறொருவர்தஞ்செவியில்வைப்பதியல்பாம், அன்மருவகண்டனேமூன்றலருமீன்றவுமையன்பனேயருமைமதவேள், அறுதினமுமனதினினிதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௩௯)

தேவர்கள் காலவளவு.

சதுரயுகமோரிரண்டாயிரம்பிதிர்படிந்சதுர்முகற்கொருதினமதாம், சாற்றுமித்தினமொன்றிலேயிந்த்ரபட்டங்களாறுமீரேழ்செல்றிடும், மதிமலியுமித்தொகையினயறுயனூறுபோய்மாண்டபோதொருசற்பமாம், மாறிவருசற்பமொருகோடிசென்றுநெடியமால்தனக்கோர்தினமதாம், துதிபரவுமித்தொகையிலொருகோடிநெடியமால்தோன்றியேபோய்மறைந்தால், தோகையோர்பாகனேநீநகைத்தணிமுடிதுடக்கிடுங்காலமென்பார், அதிகமுளபலதேவர்தேவனேதேவர்கட்கரசனேயருமைமதவேள், அறுதினமுமனதினினிதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே, (௪௰)

தூய்மையிடமும் தூய்மைசெய்வனவும்,

வாம்பரிதனக்கதிகபுனிதமுகமதனிலேமறையவர்க்குயர்புனிதமோ,மலரடியிலேபுனிதமொளிக்கண்ணுடிக்குமாகின்றுறுபுறமதனிலே, மெம்பமிம்பசுவினுக்குப்பிற்புறத்திலேமிக்கமடமாதருக்கோ, மேனியெல்லாம்புனிதமாகுமாசரசமொடுமேவுவனிதையர்தமக்கும், தாம்பிரமதற்கும்திருவெள்ளிவெண்கலமயர்தங்கமியந்தமக்கும், தரும்புனிதம்வருபெருக்கொடுபுளிசணஞ்சாம்பல்சாருமண்தானுசரணாம், ஆம்புனிதமிவையென்பர் மாபெருவில்லியேயனகனேயருமைமதவேள், அறுதினமுமனதினினிதருசதுரகிரிவளர ()

அடங்காதவற்றை அடக்குமுபாயம்.

கொடியபொலிபெருகைபிருமூக்கிலுங்கயிறென்றுகோர்த்துவசவிர்த்திகொள்வார், குவலயந்தனின்மதக்களிறதனையங்குசங்கொண்டுவசவிர்த்திகொள்வார், படியில்விஷவரவைமந்திரதந்திரத்திறம்பற்றுவசவிர்த்திகொள்வார், பாய்பரிபைநெடியசவுக்காளமதுகொடுநடைபழக்கிவசவிர்த்திகொள்வார், விடமுடையபாதகர்தனைச்சேர்பந்தனைக்கொண்டிவசவிர்த்திகொள்வார், மிக்கபெரியோர்களுங்கோபத்தையறிவாலடக்கிவசவிர்த்திகொள்வார், அடியவர்துதிக்கவருசெந்தாமரைப்பதத்தனேயருமைமதவேள், அறுதினமுமனதினிதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௪௨)

ஒளியிற்றுயர்வு.

செழுமணிக்கொளியதன் மட்டிலேயதினுமோசெய்யகச்சோ
தமெலவே, செப்பியிங்கிருமிக்கு மிச்சமொளியதனினுந் தீபத்தி
னொளியதிகமாம், பழுதிலாத்தீவட்டிதீபத்தினதிகமாம்பகல்வத்திய
திலதிகமாம், பாரமத்தாப்பினொளி யதிலதிகமதிலுமோ பனிமதிக்
கொளியதிகமாம், விழைவுதருபரிதிக்குமனுநெமன்னர்க்குர்விரவி
தாணிகருக்கும், மிக்கவொளிதிசைதொறும்போய்விளங்கிடுமென்
னவிராகுமோருணைசெய்குவார், அழல்விழிகொண்டெரிசெய்துமதனை
வேடவெவ்றயம்மனையேலயருமைமதவேள், அறுதினமுமனதினி
னைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௪௩)

குணங்குற்றமாதல்.

வான்மதியைநோக்கிடிற்சேரர்காமுகருக்குமாறுதவல்விஷம
தாம், மகிழ்நன்றனைக்காணிலிதுவிலாவிபசாரிமாதருக்கோவிஷமதா
ம், மேன்மைதருநற்சுவைபதார்த்தமுஞ்சுரரோகமிக்கபேர்க்கதிகவி
ஷமாம், வித்தியாதிபர்சபைக்கண்டபோதிலோபயிலுனர்க்கெலாம்
விஷமதாம், ஒளமிகுபுன்கவிவலோர்க்கதிகசபைகாணிலெலாதலொ
டியவிடமாம், எற்றமில்லாதபபேர்விகட்சுறவிமன்னிலென்றுமம
திகவிஷமாய், ஆனதவயோகியர்களிதயதாமரையுறையுமன்னலேல
யருமைமதவேள், அறுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்ப
ளீசுரதேவனே. (௪௪)

உயர்வின்றித்தாழ்வுசிறக்குமிடம்.

வெகுமானமாகிலுமவமானமாகிலுமேன்மையோர்செய்யில
ழகாம், விரகமேயாகிலுஞ்சரசமேயாகிலும் விழுமங்கைசெயிலழ
கதாம், தகுதாழ்வுவாழ்வுவருதருமங்களைச்செய்து சாரிலோபோ
ழகதாம், சரீரத்திலோருனமானமெதுவாகிலுஞ்சமர்செய்துவரிலழ
கதாம், நகமேவுமதகரியிலேறினுந்தவறினுநாளுமதுவோரழகதாம்
நாய்மீதிலேறிவீழினுங்கண்டபேர் நகைசெய்தழகன்றென்பர்
காண், அகமாரநற்றவர்க் கருள்புரியுமையபனேயாதியேயருமைமத
வேள், அறுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவ. ()

நல்வினைசெய்தோர்.

சரணெனக்காத்தவன்மெய்யினிலவென்றவன்றனமீனேயாது
தவிறென், தந்தைசொன்மாறாதவன்முன்னவற்காவலன்றாய்பழுது
டைத்தமொழியோன், வருபிதிர்க்குதவிசெய்தோன்றெய்வமேதுனையே
ன்றுரைத்தன்மனைவிபைவலைத்தோன், மாறனதர்மைதயைத்தமை
யவைப்பிழைகண்டுமாய்ந்தலங்கின்மனைபெற்றோர், கருதரியசிபி
யரிச்சந்திரன்மாபலிகணிக்கியோன்சமுக்கிராசுதன், கருடன்பக
திருடன்கிரத்தொண்டலேறுகொணவைராகலாதன், அரியவன்விபீ
ஷணவிஹனுமகாபுருஷராமத்தேனையருமைமதவேள், அறுதினமும
னதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௪௬)

தீவினைசெய்தோர்.

வாயிகழ்வுபேசிமிகு வாழ்விழந்தோன்சிவனை வைதுதன்றலை போயினோன், மற்றொருவர்தாரமதில் விச்சைவைத்துடலெலா மாறாதவடுவாயினோன், தாயாதியோர்க்குள்ள பங்கைக்கொடாமலே சம்பத்திழந்துமாய்ந்தோன், தக்கபெரியோர்தமை வணங்காமதத் தினால் நந்திவழுவாயலைந்தோன், மாபனைச்சபையதனி னிந்தனை செய்தொளிகொணவ மணிமுடிதுணிந்துமாய்ந்தோன், வருமிடை யெடுத்தக்க ணயிராவதன் குருடன் மகன்வழுதிசிசுபாலனும், ஆயுமறிவாளரொடு தேவர்பணிதாளனே யவனிபுகழருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௩௯)

நன்னகர்.

வாவிபலகூபமுட னாறுகுசேர்வதாய் மலைகாதவழியிலுள தாய், வாழைகமுகொடுதெங்கு டயிராவதாய்ச்செந்நெல் வயல்கள் வாய்க்கால்களுளதாய், காவிகமலங்குவளை சேரேரியுள்ளதாய்க் கன வர்த்தகாண்மறைவலோர், காணரியபலகுடிக ணிறைவுள்ளதாய்நல் ல காவலனிருக்கையுளதாய்த், தேவராலயமாடல் பாடலணிமாளி கைசிறக்கவுளதாய்ச்சற்சனர், சேருமிடமாகுமோ ரூர்கிடைத்ததி லதிக சீவனமுமேகிடைத்தால், ஆவலொடிருந்திடவ தேசொர்க்க வாசமென் றறையலாமருமைமதவேள், அநுதினமுமனதினினை. ()

தீநகர்.

ஈனசாதிகள்குடி யிருப்பதாய்முள்வேலி யில்லில்லினுக்குமு ளதாய், இணைமுலைதிறந்துதன் தலைவிரித்திடுமாத ரொங்குநடமாட் டமுளதாய்க், கானமொருபக்கமாய் மலையோரமாய்முறைக் காய்ச்சல்கப்பாதயிடமாய்க், கள்ளர்பயமாய்நெடிய கயிறிட்டிறைக்கின்ற கற்கேணிநீருண்பதாய், மானமில்லாக்கொடிய துர்ச்சனர்தம க்கேற்ற மணியமொன்றுண்டானதாய், மாதிலத்தோர்தவ மிருந்து தனிக்கெகுவாழ்வு வாய்வதிலுமருநரகிலே, ஆனநெடுநாள்கிடந் துழந்தலேசுகமாகு மமலனேயருமைமதவேள், அநுதினமுமனதி னினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௪௧)

முழுக்குநாள்.

வருமாதிவாரந் தலைக்கெண்ணெயாகாது வடிவயிருமழகுபோ கும், வளர்திங்களுக்கதிக பொருள்சேருமங்கார வாரந்தனக்கிடர் வரும், திருமேவுபுதனுக்கு மிகுபுத்திவந்திடுஞ் செம்பொனுக்குப ரறிவுபோம், தேடியபொருட்சேத மாம்வெள்ளிசனியென்னிலோ செல்வமுண்டாயுளுண்டாம், பரிகாரமுளதாதி வாரந்தனக்கலரி பொன்னுக்கானசெழுமண், பச்சறுகுபொன்னவற் காமெருக்கு வெள்ளிப்பாற்கவற்காருமெனவே, அரிதாயறிந்தபேரெண்ணெயிட் டேமுழுக் காடுவாருருமைமதவேள், அநுதினமுமனதினினை. (

மருத்துவன்.

தாதுப்பரிசைவரு காலதேசத்தோடு சரீரலட்சணமறிந்து, தன்மந்திரிகும்பமுனி தேரர்செங்கணர்சித்தர் தமதுவாகடமறிந்து, பேதப்பெருங்குளிகை சத்துவகையாத்திரைப் பிரயோகமோடு பஸ்பம், பிழைபடாதுமண்டூர செந்தூரபட்சணம் பேர்பெறுங்குணவாகடம், சோதித்துவடலிகா விதநிகண்டுங்கண்டு தூயதைலம் லேகியம், சொல்பக்குவங்கண்டு வருரோகநிண்ணயந் தோற்றியே யமிர்தகரராய், ஆதிப்பெருங்கேள்வி யுடையராயுள்ளபேர் ஆயுள்வேதராகு மெய்தருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுர. (௩௧)

உண்மையுணர்க்குறி.

சோதிடம்பொய்யாது மெய்யென்பதறிவரிய சூழ்கிரகணஞ்சாட்சியாம், சொற்பெரியவாகடம் நிசமென்கைபேதிதரு தூயமாத்திரைசாட்சியாம், ஆதியிற்செய்ததவ முண்டில்லையென்பதற் காளடிமையேசாட்சியாம், அரியசவமேதவனென் பதையறியமுதனூலரிச்சுவடியேசாட்சியாம், நாதனேமாதேவ னென்பதற்கொருதார நமகசமகஞ்சாட்சியாம், நாயேனைரட்சிப்ப துன்பாரமரியய னுனுமர்ச்சனைசெய்ச்சரணத், தாகிநாயகன்பிக்ஷ வேதநாயகனுன வண்ணலே யருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள. (௩௨)

பிறவிக்குணமாறாமை.

கலங்காதசித்தமுஞ் செல்வமுஞ்ஞானமுங் கல்வியுங்கருணைவிளையும், கருதரியவடிவமும் போகமுந்தியாகமுங் கனரூபமுளமங்கையும், அலங்காதவீரமும் பொறுமையுந்தந்திரமு மாண்மையுமமுதமொழியும், ஆனவிச்செயலெலாஞ் சனனவாசனையினுலா லிவருமன்றிநிலைவேல், நலஞ்சேருமொருவனைப் பார்த்ததுபெறக்கரூடி னஸ்னுமோரஸ்தாளிதன், நற்சவைதனக்குவர் வேம்புதவமோநிழ்வது நல்செயிறார்வாராதுகாண், அலங்காரமாகமலர்கொன்றைமாலிகைசூடு மண்ணலேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௩௩)

உளவலி.

கடலளவுகாத்திடுவ ரிபிரமருருவமுங்காணும்படிக்குவைசெய்வார், காவினியினளவுபிரமாணமதுசொல்லுவார் காயத்தினிலைமையறிவார், விடவரிவசியினை காட்டுவார்மூச்சையும் விடாமற்றடுத்தடக்கி, மென்மேலும்யோகசாதனைவிளைப்பாரொட்டி விண்மீதிலுந்தாவுவார், தொடவரியபிரமதில காட்டுவாரெண்வகைத் தொகையாளைத்தறிவார், சூழ்வினைவரும்பொழுதுசிக்கியுழல்வாரது தடைசெய்வொருநான்முகத்தும், அடைவலதெனத்தெரிந் தளவில்பலநூல்சொல்லு மண்ணலேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௩௪)

ஒப்புயர்வில்லாதவை.

வேதியர்க்கதிகமாஞ்சாதியுங்கனகமசமேருவுக்கதிகமலையும் வெண்டிரைகொழித்துவருகங்காநதிக்கதிகமேதினியிலோடுநதியும் சோதிதருமாதவர்க்கதிகமாங்காந்தியுஞ்சூழ்கனற்கதிகசுசியும் தூயதாய்தந்தைக்குமேலானதெய்வமுஞ்சுருதிக்குயர்ந்தகலையும் ஆதிவடமொழிதனக்கதிகமாமொழியுநகரன்னதானந்தனிலுமோர் அதிகதானமுமில்லையென்றுயலநூலெலாமாராய்ந்துபேருரைசெய்வார், ஆதவன்பிரமன்விண்ணவர்முநிவர்பரவவரு மண்ணலேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசு()

வீண்செயல்.

வேட்டகஞ்சேர்வோரும் வீணரோவீணுணாவிரும்புவோரவரின்வீணர், விருந்துகண்டில்லாடனக்கஞ்சியோடிமறைவிரகிலோரவரின்வீணர், நாட்டர்தருங்கல்வி யில்லோரும்வீணரோ நாடியவர்மேற்கவிசொல்வார், நானிலந்தனில்வீண ரவரினும்வீணரே நாரைச்சுமக்குமெளியோர், தேட்டறிவிலாதபெருவீணரோவெவரினுஞ்சேரொருவருக்குமின்றிச், செலவுசெய்வோரதிகவீணராம்வீணுய்த்திரியுமெளியேனையாட்கொண், டாட்டஞ்செயும்பதாம்புயமுடியின்மேல்வைத்த வமலனேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௫௭)

உதவியின்றிக்கெடுவன.

மூப்பொருவரில்லாதகுமரிகுடிவாழ்க்கையுமூதாளிலாதநகரும் மொழியும்வெகுநாயகஞ் சேரிடமும் வருமெதுகைமோனையில்லாதகவியும், காப்பவமிலாதவோர் நந்தவனமுந்நல்லகரையிலாநிறையேரியும், கசடறக்கற்காதவித்தையுமுபதேசகாரணனிலாததெளிவும், கோட்புளவிநோதமுடையோரருகுபுகழாதகோதையர்செய்கூத்தாட்டமும், குளிர்புனனிறைந்துவருமாற்றோரமதினின்றுகோடுயர்ந்தோங்குதருவும், ஆப்பதில்லாததேரிவையெலாமொன்றுகுமையனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளர()

இவையேபோதுமெனல்.

பொய்யாதவாய்மையுஞ்சீலமுஞ்சார்ந்துளோர்தவமுஞ்செயவேண்டுமோ, பொல்லாதகொலைகளவிலாதநன்னெறியுளோர்புகழறஞ்செயவேண்டுமோ, நையாதகாமத்தைலோபத்தைவிட்டபேர்நல்லறஞ் செயவேண்டுமோ, நன்மனேசுத்தியுண் டானபேர்மேலுமொருநதிபடிந்திடவேண்டுமோ, மெய்யாதினடியனைப்பரவுவோருன்பதம்விரும்பிவழிபடவேண்டுமோ, வேதியர்தமைப்பூசைபண்ணுவோர்வானவரை வேண்டியர்ச்சனைசெய்வரோ, ஐயாருடன்கயிலைசோணசலந்தில்லையதிபனேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௫௮)

அறிவாரவோர்.

பதின்மரி,லொருத்தர்சபை மெச்சிடப்பேசுவோர் பாடுவோர்
நூற்றிலொருவர், பார்மீதிலாயிரத்தொருவர்வித்தைப்பாடிப்ர
சங்கமிடுவோர், இதனருமையறிகுவோர் பதினாயிரத்தொருவரிதை
யறிந்திதயமகிழ்வாய், ஈகின்றபேர்புவியிலேயருமையாகவேயிலட்
சத்திலேயொருவராம், ஆதிபெருகவருமூன்று காலமுமறிந்தமெய்த்
தூயர்கோடியிலொருவராம், தொல்லுலகுபுகழ்காசி யேகாம்பரங்
கைலைசூழுமவனிசிபேரூர், அதிகமுளவெண்காடுசெங்காடுகாளத்தி
யத்தனையருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவ
ளரறப்பளீசுரதேவனே. (௫௧)

கற்புமேம்பாடு.

தன்கணவனுருவமாய்த்தற்புணரவந்தோன்றனக்கிணங்காதநிறை
யாள், தழற்கதிரொழாமலும் பொழுதுவிடியாமலுஞ் சாபங்கொடுத்த
செயலாள், மன்னிவளரழன்மூழ்கி யுலகறியவேதனதுமகிழ்நனைச்
சேர்ந்தபரிவாள், மைந்தனைச்சுடவந்த விறைவன்றடுத்தவடி வாண்
மாலையானகனிவாள், நன்னதிபடிந்திடுவதென்னவாரழன்மூழ்கிநா
யகனைமேவுதயவாள், ஞானிலம்புகழ்சாலிபேர்பெறுநளாயினிநளின
மலர்மேல்வைகியே, அன்னமெனவருசந்திரமதிதுரோபதியென்ப
ராகியேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவள(

கோடியுடுக்குநாள்.

கறைபடாதொளிசேருமாதிவாரந்தனிற்கட்டலாம் புதியசேலை
கலைமதிக்காகாதுபலகாலுமழையினிற்கடிதுநனைவற்றெழுதரும்
குறைபடாதிடர்வரும்வீரியம்போமரியகுருதிவாரமணக்குக்
கொஞ்சநாளிற்கிழியும் வெற்றிபோம்புந்தியிற் குருவாரமதிலணிந்
தால், மறைபடாதழகுண்டுமேன்மேலுநல்லாடைவருமினியசுக்கிர
ற்கோ, வாழ்வுண்டுதிருவுண்டுபொல்லாதசனியற்கு வாழ்வும்பாமர
ணமுண்டாம், அறைகின்றவேதாகமத்தின்வழிவாய்விளங்கபலனே
யருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்ப()

சகுனம்.

சொல்லரியகருடன்வானரமரவுமூஞ்சூறுகூகைகாங்கிரிகலைமான்
துய்யபாரத்வாசமட்டையெலிபுன்கூகை சொற்பெருகமருவுமாத்
தை, வெலலரியகரடிசாட்டான்பூனைபுலிமேல்விளங்குமிருநாவுடும்
பு, மிகவுணாசெயினைய்யலார்வலமிருந்திடமாகில்வெற்றியுண்டாக
நலமாம், ஒல்லையில்வழிப்பயணமாகுவோர்தலைதாக்கவொருதுடை
யிருந்தல்பெற்றல், ஒருதும்மலாணையிடலிருமல்போகேலென்னபு
பசருதிசொல்வினவெல்லாம், அல்லறருநல்லதலவென்பர்முநிவோ
ர்பரவுமமலனேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசது
ரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௫௪)

இதுவுமது.

நரிமயிர்ப்பசுங்கிள்ளை கோழிகொக்கொடுகாக்கை நாவிசிச்சிலி யோர்த்திதான், நாயான்கடுத்தவாய்ச் செம்போத்துடன்மேதி நா டரியசரபமறையோர், வரியுழுவைமுயலிவையனைத்தும்வலமாயிடி ன் வழிப்பயணமாகநன்றாம், மற்றுமிவையன்றியே குதிரையனுமா னித்தல் வாய்ச்சொல்வரவாவென்றிடல், தருவளைதொனித்திடுதல் கொம்புகிடுமுடிமுரசு தப்பட்டையொலிவல்வேட்டுத், தனிமணிமு ழக்கெழுத லிவையெலாமூர்வழி தனக்கேகநன்மையென்பார், அ ருணகிரணத்தையத் தருணபானுவையனைய வண்ணமேலயருமைமத வேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுர. (௯௩)

இதுவுமது.

தலைவிரித்தெதிர்வருத லொற்றைப்பிராமணன் றவசிசன்னாசி தட்டான், றனமிலாவெறுமார்பி மூக்கறைபுல்விறகு தட்டைமுடி மொட்டைத்தலை, எலன்கழிமடந்தையர் குசக்கலஞ்செக்கான் கதித் திடுந்தைலமிலைகள், காணவெதிர்வரவொண்ணா நீர்க்குடமெருக்கு டை கவிபுலாலுபயமறையோர், நலமிகுசுமங்கலை கிழங்குகுதகும ங்கை நாறுநல்வண்ணமுக்கு, நசைபெருகுபாற்கலச மணிவளை யன்மலரிவைகளடியெதிர்வரநன்மையாம், அலைகொண்டகங்கை புனை வேணியாய்பரசனையு மண்ணமேலயருமைமதவேள், அநுதின முமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௯௪)

உணவில்விலக்கு.

கைவிலக்குச்சோறும் பாலசப்பால்வருங் காராக்கறந்தவெ ண்பால், காளான்முருங்கைசுரை கொம்மடிபழஞ்சோறு கார்திக்க ரிந்தசோறு, செவ்வையில்சிறுகீரை பீர்க்கத் திவெள்ளுப்பு தென் னைவெல்லம்லாவகம், சீரிலாவெள்ளுளி யிருள்ளியிங்குவொடு சிறப் பில்வெண்கத்தரிக்காய், எவ்வமில்சிவன்சோயி னிர்மாலயங்கிரண மிலஞ்சுடரில்லாதவூண், இவையெலாஞ்சிலமுடையோர்களுக்காகா தெனப்பழையநூலுரைசெயும், ஐவகைப்புலன்வென்ற முநிவர்வி ண்ணவர்போற்று மமலனேயருமைமதவேள், அநுதினமுமனதி()

நற்பொருளிற்குற்றம்.

போனகங்கா நதிக்குமதன்மேல்வரும் பேனமேதோஷமா கும், பெருகிவளர்வெண்மதிக் குள்ளுட்களங்கமே பெரிதானதோ ஷமாகும், சாந்தபோதனர்க் கொருவர்மேல்வருகின்ற சிற்றமே தோஷமாகும், திறன்முடிமன்னவர் விசாரித்திடாதொன்று செய் வதவர்மேற்குறமாம், தாராளமாமிகத் தந்துளோர்தாராமை தானி ரப்போர்தோஷமாம், சாரமுளநற்கருப் பஞ்சாறுகைப்பதவர் கா லஞ்செய்தோஷமாகும், ஆராயுமொருநான்மறைக்குமெட்டாதொ ன்று மண்ணமேலயருமைமதவேள், அநுதினமுமனதினினை. (௯௬)

மனைகோல்வதற்குமாதம்.

சித்திரைத்திங்கடனின் மனைகோலமனைபுகச் செல்வமுண்டாகு நலமே, சேரும்வைகாசிக்கு மேலுளரன்புரத் தீயிட்டதானியாகா, வெற்றிகொளிராகவன் றேவிசிறைசேர்கடகம் விறல்லவாவணி சுகம், மேவிடுங்கன்னியிர ணியன்மாண்டதாகாது மேன்மையுண் டைப்பசிக்கே, உத்தமங்கார்த்திகைக் காகாதுமார்கழியி லோங்கு பாரதம்வந்தநாள், உயர்வுண்டுமகரத்தின் மாசிமாதத்தில்விட முமுபர்கோனுண்டதாகா, தத்தநீமாசனை யெரித்தபங்குனிதானு மாகுமோவருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரி. (கஎ)

விருந்துவாரம்.

செங்கதிர்க்குறவுபோம்பசைவரும்விருந்தொருவர்செய்பொருளதுவன்றொறறு, திங்களுக்குறவுண்டு நன்மையாம்பகைவருஞ் செவ்வாய்விருந்தருந்தார், பொங்குபுதனன்மையுண்டுறவாம்விருந் துணைப் பொன்னவற்கதிகபகையாம், புகரவற்காகிலோ நெடுநாள்வி ரோதமாய்ப் போனவுறவுந்திரும்பும், மங்குணிகர்சநிவார நல்லதா மிதனிலுறு மனைபொருந்திருந்தவிடமே, வாலாயமாய்ப்போய் விருந் துணவிருந்துகவ வாய்த்தநாளென்றறியலாம், அங்கையில்விளங்கி வளர் துங்கமழுவாளனை யண்ணலேயருமைமதவேள், அநுதின முமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (கஅ)

பூப்புவாரம்.

அருக்கனுக்கதிரோகி யாவளத்சோமனுக்கானகற்புடையளா வள், அங்காரகற்குவெகு துக்கியாவாள்புத்தி யளவில்லைபங்குழவி பெறுவாள், திருத்தகுவியாழத்தின் மிக்கசம்பத்தினொடு சிறுவரைப்பெற்றெடுப்பாள், சீருடையபார்க்கவற் கதிபோகவதியுமாந்திரு வுமுண்டாயிருப்பாள், கருத்தழிந்தெழில்குன்றி வறுமைகொண்டலைகுவாள் காரிவாரத்திலாகில், களபமுலைமடமாதர் புஷ்பவதியாம் வார காலபலனென்றுரைசெய்வார், அருத்தியுடனெளியேனை யாட்கொண்டசோதியே யண்ணலேயருமைமதவேள், அநுதினமுமு. ()

பூப்புலக்கணம்.

வருணமதப்பாதுவரு மேடத்திலிடபத்தின் மாறுதலிபாரியாம், வாழ்வுண்டுபோகமுண் டாகுமிதுனங்கடகம் வலிகனிற்பிறளாயவாள், சிறுமைசெயுமிடிசேர்வண் சிருமேத்திரத்கெனிற்சீர்பெறுவள்கன்னியென்னில், சேட்டுடையயில்லையெனிற் பிணியான் மெலிந்திடுவ டேளினுக்குத்தநுசெனில், நெறிசிறைதவள்பூருவத் தபமநெறியுடையளா நீள்மகரமாணமிலளாம், நிறைபோகவதிகும்பமெனின்மீனமென்னிலோ நெடியபேரறிவுடையளாம், அறிவாளர் மடமாதர் சமையமறியிராசிபல னதுவென்பரருமைமதவேள், அநுமனமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (உ௰)

தீவுங்கடலும்.

நாவலந்தீவினைச் சூழ்கருங்கடலளவு லட்சம்யோசனையிதனையே, நாடோறுஞ்சூழ்வது லவந்தீவதைச்சூழ்த னற்கழைச்சாற்றின் கடல், மேவுமிதுசூழ்வது குசத்தீவதைச்சூழ்தன் றிருமதுக்கடலதனையே, விழைவொடுஞ்சூழ்தல்கிர வுஞ்சத்வீபமிதன் மேற்சூழ்த னெய்க்கடலதாம், பூவிலிதுசூழ்தல்சா கத்தீவுமிங்கிதைப் போர்ப்பது திருப்பாற்கடல், போதவதுசூழ்தல்சான் மலித்தீவுமார்தயிர்ப் புணரியப்பாலுமப்பால், ஆவலுறுபுட்கரத் தீவமதைச்சூழ்வ தரிய புனலருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவ. (எக)

மேலானபொருள்கள்.

கழிசுற்றமாயிருந் ததிலும்படைக்கான துரகமோர்மாணிக்கமாம், சூழ்புவிக்கரசனு மதிமேல்விவேகமுள துரையுமோர்மாணிக்கமாம், பழுதற்றவதிரூபவதியுமாய்க்கற்புடைய பாவையோர்மாணிக்கமாம், பலகலைகள்கற்றறி யடக்கமுளபாவலன் பார்க்கிலோர்மாணிக்கமாம், ஒழிவற்றசெல்வனு மதிலேதியாகியா முசிதனோர்மாணிக்கமாம், உத்தமகுலத்துதித் ததிலுமோமெய்ஞ்ஞான முடையனோர்மாணிக்கமாம், அழிவற்றவேதாகமத்தின்வடிவாய்விளங் கமலனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரி. (எஉ)

உண்டியிலையும்முறையும்.

வாழையிலைபுன்னை பரசடைநற்குருக்கத்தி மாப்பலாத்தெங்கு பதிநீர், மாகிலமுதுன்னலா முண்ணுதுவோவரசு வனசஞ்செழும்பாடலம், தாழையிலையத்தி யாலோண்டபத்திரஞ் சகதேவமுண் முருக்குச், சாருமிவையன் றிவெண் பாலெருக்கிச்சிலிலைதனி லுமுண்டிடவொணாதால், தாழ்விலாச்சிற்றுண்டி நீரடிக்கடிபருகல் சாதங்கள்பலவருந்தல், சற்றுண்டன்மேனித்தலுமித்தனையுமெய்ப்பிணி தனக்கிடமெனப்பருகிடார், ஆழிபுடைசூழுலகில் வேளாளர்குலதிலக னாகுமெமதருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (எங)

கவிஞர்வறுமை.

எழுதப்படிக்கவகை தெரியாதமூடனை யிணையிலாச்சேடனென்றும், ஈவதில்லாதகன லோபியைச்சபையதனி லிணையிலாக்கர்ணனென்றும், அழகற்றவெகுகோர ரூபத்தையுடையோனை யதிவடிவமாரனென்றும், ஆயுதமெடுக்கவுந் தெரியாதபேடிதனை யாண்மைமிகுவிஜயனென்றும், முழுவதும்பொய்சொல்லி யலைகின்றவஞ்சகனை மொழியரிச்சந்த்ரனென்று, மூதுலகிலிவ்வணஞ் சொல்லியே கவிராசர் முறையின்றியேபெற்பதென்னே, உழவிகனவுதித்தகரு விஷமுண்டகண்டனே யமலனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (எச)

கவிஞன்.

தெள்ளமிர்தநாரையென மதுரங்கனிந்தசுவைத் தேன்மடைதிறந்ததெனவே, செப்புமுத்தமிழொடு நாற்கவிதைநாற்பொருடெரிந்துரைசெய்திறமையுடனே, விள்ளரியகாவியத் துட்பொருளலங்காரம் விரிவிலக்கணவிகற்பம், வேறுமுளதொன்னூல் வழக்குமுலகத்தியல்பு மிக்கப்ராயத்தவண்மை, உள்ளமெல்லாமறிந்தலையடங்குங்கடலையொத்தசபைகண்டபோ,தோங்கலையொலிக்கின்றகடல்போற்ப்ரசங்கமதுரைப்பவன்கவிஞனாகும், வள்ளிவிழிபூண்டகனிவாயனேநேயனேயமலனேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௭௫)

நற்சார்பு.

ஞானியபெரியோர்க டெரிசனங்லபிப்பதே கண்ணிணைகள் செய்புண்ணியம், கருணையாயவர்சொன்மொழி கேட்டிடலபிப்ப திருகாதுசெய்திடுபுண்ணியம், பேணியவர்புகழ்மே துதிசெயலபித்திடுதல் பெருவாய்செய்தபுண்ணியம், பிழையாமலவர்தமைத் தொழுதிடலபிப்பது கைபெரிதுசெய்திடுபுண்ணியம், வினைதிசெலாமலவர்பணிவிடையலபிப்பதுதன் மேனிசெய்திடுபுண்ணியம், விழைவொடவர்சொற்படி நடந்திடலபிப்பதே மிக்கபூருவபுண்ணியம், ஆணவமெனுங்களைகளைந்தறிவினைத்தந்த வண்ணலேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப். (௭௬)

பிறந்தநாளொடுவருகிறவாரபலம்.

சென்மநக்ஷத்திரத் தாதிவாரம்வரிற் றீராதலைச்சலுண்டாம், திங்களுக்காகில்வெகு சுகபோசனத்தினொடு திருமாதினருளுமுண்டாம், வன்மைதருமங்கார வாரம்வந்தாற்சிறுதும் வாராதுசுகமதென்பார், மாசில்பலகலைபயில்வர் மேன்மையாம்புந்தியெனும் வாரத்துடன்கூடினால், நன்மைதருகுருவார மதுசேர்ந்துவரிலாடை நன்மையுடனேவர்த்திடும், நாரியருடன்போக மிகவுமுண்டொருவெள்ளி நல்லவாரத்தில்வந்தால், அன்மருவுபீடையுண் டாமென்பர்சநியினுக் கமலனேயருமைமதவேள், அநுதினமுமனதிநினை தரு. (௭௭)

இதனையுடையவர்க்கு இதுவில்லையெனல்.

பொன்றனையுள்ளவர்க் குறவேதுகருவேது பொய்க்குபசிபு ள்ளபேர்க்குப், போதவேசுசியேது ருசியேதுமயல்கொண்டபொருமாதர்விழிவலையிலே, எந்நாளுமலைபவர்க் கச்சமொடுவெட்கமேதென்றுமேகல்வியதின்மேல், இச்சையுளபேர்க்கதிக சுகமேது துயிலேது வெளிதாயிருந்துகொண்டே, பன்றனுமலைபவர்க் கிசையேதுபுகழேது பாரிலாருவர்க்கதிகமே, பண்ணியிடுமுடருக்கறமேதுமறமைநீத் பார்த்திடைபமொன்றுளதுகாண், அன்றனைவருக்கரியுத்தனிபுனையப்பனே யமலனேயருமைமதவேள், அநுதினமு.

மழைநாட்குறிப்பு.

சித்திரைத்திங்கட்பதின் மூன்றுக்குமேனல்ல சிரானபரணிம
ழையும், வைகாசியிற்பூர்வைகழித்தபின்சேருநாலாளினில்
ஒத்துவருமழையுமவ்வானியிற்றேய்பிறையிலோங்குமோகதகியினி
ல், ஒளிர்பரிதிவீழ்பொழுதின்மர்தாரமும்மழையுமுண்டாயிருந்தா
டியில், பத்திவருதேதியைத்திணிலாதிவாரமும்பகருமாவணிமூலநா
ள், பரிதியுமறைந்திடக்கனமழையொழிந்திடப்பாரில்வெகுவிளைவு
முண்டாம், அத்தனைபைங்குவளைமாலையணிமார்பனேயண்ணலே
யருமைமதவேள், அறகினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்ப()

இருந்துமுதவாமை.

சமயத்திலுதவாதநிதியமேன்மிக்கதுயர் சார்பொழுதிலாதகிளையே
ன். சபைமுகத்துதவாதகவிகையேனெதிர்வருசமயத்திலாதபடை
யேன், விமலனுக்குதவாதபூசையேனேருமிருள்வேளைக்கிடாதசுட
ரேன், வெம்பசிக்குதவாதவன்னமேனீடுகுளிர்வேளைக்கிலாதவுடை
யேன், தமதுதளர்வேலைக்கிலாதவோர்மனைவியெண்சரசத்திலாதந
கையேன், சாமரணகாலத்திலுதவாதபுதல்வனேன்றரணிமீதென்பர்
கண்டாய், அமரர்க்குமுனிவர்க்குமொருவர்க்குமெட்டாதவாதிவே
யருமைமதவேள், அறகினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்ப
ளீசரதேவனே. (அய)

மறையோர்சிறப்பு.

ஓராறுதொழிலையுங்கைவிடார்சௌசவிதியொன்றுதப்பாதுபு
ரிவார், உதயாதியிற்சென்றுநீர்படிகுவார்காலமொருமூன்றிலுக்கு
மறவார், தாராய்ந்துகாயத்திரியதுசெபிப்பார்நாளுமதிதிபூசைகள்ப
ண்ணுவார், யாகாதிகருமங்கள்மந்த்ரகிரியாலோபமின்றியேசெய்
வருவார், பேராசைகொண்டிடார்வைதிகநன்மார்க்கமேமுமிழைய
குருக்குமறையோர், பொய்யெனப்பெய்யுமிலவர்மகிமைபெடவர்க
ளும்பேசுதற்கரிதரிதுகாண், ஆரார்நெடுஞ்சடிலவமலனேயெனையா
ளுமண்ணலேயருமைமதவேள், அறகினமுமனதினினை தருசதுர
கிரிவளரறப்பளீசரதேவனே. (அக)

அரசர்சிறப்பு.

மனுநீதிமுறைமையும்பராரசர்கொண்டாடவருமதிகரணவீர
மும், வான்விஜயமொடுசரசசாதனவிசேஷமும்வாசிமதகரியேற்ற
மும், கனமாமமைச்சரும்பலமான துர்க்கமுங்கைகண்டபோர்ப்ப
டைஞரும், கசரதபதாதியுந்தூசுப்பிரவாகமுங்காலதேசங்களைவை
யும், இனிதாயறிந்தஸ்தானுபதிகளொடுசமர்க்கிளையாததளகர்த்தரு
ம், எவ்வைம்பற்றுதனதானியசமுத்திரமுமேற்றமுளகுடிவர்க்கமு
ம், ஆனவோருமெச்சவிங்கிவையெலாமுடையபேராசராமருமை
மதவேள், அறகினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசர.()

வைசியர்சிறப்பு.

நீர்கடல்கடந்திடுவர்மலையாளமும்போவர்நெடிதூரந்திரிந்து திரைவருடுமாறர்கள்சலிபார்கள்பொருள்தேடி நீணிலத்தரசுபுரியும் வாளுழவரைச்சமதுகைகலசஞ்செய்வார்கள் வருபிடர்வராதவிடமும், மனதையமறிந்துதவிபொன்றுநூறாயிடவளர்ப்பவருதுலைதுலைக்கும், ஆன்விடுவர்மகிவுமுறைறவதுவிசாரித்திடுவாளவில்பற்பலசரக்கும், அமையறச்சொல்வர்விற்பார்கணக்கதிலறுவுமறவிடார்செலவுவரிலோ, அளியத்தேவலையிலளவுங்கொடுத்திடுவரருள்வசியராருமைமதவேள், அறுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசு()

வேளாளர்சிறப்பு.

இசைநிகருமமுர்தப்பாமல்வேதியரியற்றிநல்லோர்பெறுவதும், இராச்சியபாரஞ்செய்துமுடிமன்னர்வெற்றிகொண்டேற்றநற்பேர்பெறுவதும், வசைநிதப்பாது தனதானியந்தேடி வசியர்நல்லோர்பெறுவதும், மற்றுமுளபேரெலா மிடியென்றிடாதநிகவளமைபெற்றோர்பெறுவதும், திசைதோறுமுள்ளபல தேவாலயப்பூசை செய்பநல்லோர்பெறுவதும், சீர்கொண்டபைங்குவளைமாலைபுனைவேளாளர்செய்யுமேழிப்பெருமைகாண், அசையாதுவெள்ளிமலைதனில்மேவிவாழ்கின்றவல்லமைலயருமைமதவேள், அறுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (அச)

தானாதிபதிமந்திரிசேனாபதிகளினியல்பு,

தன்னரசர்வலுமையும் பராக்கிரமெண்ணமுஞ் சாலமேல்வருகருமமும், தானறிந்ததிபத்தியுண்டாயிருமென் றானாதிபதியாகுவான், மன்னவர்மனத்தையுங்காலதேசத்தையும் வாழ்குடிபடைத்திறமையும், மந்திராலோசனையுமெல்லாமறிந்தவன்வளமானமந்திரி, துன்னியபடைக்குணங்கரிபரிவிசையேகுழ்பகைவர்புரிசூழ்ச்சியும், தோலாதவெற்றியுந்தபாலசித்திடவல்லசூரனேசேனாதிபன், அன்னவணிநல்லமலைமங்கைபங்காளனே யனகனேயருமைமதவேள், அறுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவ ()

இராயசக்கருணீகர்சிறப்பு.

ஒருமோலையுத்தரத்தெழுதிவருபொருளுள்ளல்வாவிடுப்போன்மனதைய. மருவிவருகருமமுந்தேசகாலங்களையும்வருகாதலாகமலைபாய், வினைவாயறிந்தரசரெண்ணியெண்ணியவளவில் எழுதவாசிக்கவே, வெற்றிகொண்டேபெரியபுத்தியுடையோனுயர்மென்மையாயசக்கராளும், கருவாயறிந்துதொகையிராசிராசிப்பிரிக்குந் தேத்திடக்குறைக்கக், கடுகைவொருமலையாக்கமலையையொருகடுகுமாக்காட்டுவோன்கருணீகனும், அருவாகியுருவாகியொளியாகிவெளியாகுமண்ணலேயருமைமதவேள், அறுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (அசு)

கோபத்தின் கொடுமை.

கோபமே பாவங்களுக்கெலாந் தாய்தந்தை கோபமே குடிகெடுக்கும், கோபமே யொன்றையுங் கூடிவரவொட்டாது கோபமே துயர்கொடுக்கும், கோபமே பொல்லாது கோபமே சீர்கேடு கோபமே யுறவறுக்கும், கோபமே பழிசெயுங் கோபமே பகையாளி கோபமே கருணைபோக்கும், கோபமே யீனமாங் கோபமே யெவரையுங் கூடாமலொருவனாக்கும், கோபமே மறலிமுன் கொண்டுபோய்த்தியநரகக்குழியினிற்றள்ளுமாம், ஆயதெலாந்தவிர்த் தென்னையாட்கொண்டருளு மண்ணலே யருமைமதவேள், அனுதினமுமனதினினை. ()

பலதுறை.

தான்புரிதவத்தையுங் கொடையையும்புகழுவோர் தங்களுக்கவைதனையிழவுறு, சற்றுமறிவில்லாமலந்தணரைநிந்தனைசெய் தயவிலோராயுள்பெறுவார், மென்படுநறுங்கலவையாலே தயிர்பால்புலான் விடுநற்செந்நெலிவைகள், வேறொருவர்தந்திடினு மனுமொழியதிருந்தபேர் விலைகொடுத்தேகொள்ளுவார், தேன்கனிகிழங்குவிறகிலையிவையனைத்தையுந் தீண்டரியநீசரொளினும், சீர்பெறவளிப்பரேற் கழலாதுவகைக்கொள்வர் சிலமுடையோரென்பரால், ஆன்கொடியுயர்த்தவுமை நேசனேயீசனே யண்ணலேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே. (௮௮)

தத்துவத்திரவியம்.

பூதமோரைந்துடன் புலனைந்துஞானம் பொருந்துமிந்திரியமைந்து, பொருவில்கன்மேந்திரியமைந்துமனமாகியாம்புகலரியகரணநான்கே, ஒதிமேருரிவையாத்மதத்துவமெனச்சொல்வருயர்காலநியதிகலையோ, டோங்கிவருவித்தைராகம்புருடன்மாயைஎன் றுரைசெய்யுமோரேழுமே, நிதில்வித்யாதத்துவமென்றிடுவரிவையலாற் றிகழ்சுத்தவித்தையீசன், சீர்கொள்சாதாக்கியஞ் சத்திசிவமைந்துமே சிவதத்வமென்றறைகுவார், ஆதிவடநீழலிற் சனகாதியர்க்கருள்செ யண்ணலேயருமைமதவேள், அநுதினமுமனதினினைதரு. ()

மன்மதபாணமும் அவற்றின் குணமுதலியவும்.

வனசஞ்செழுஞ்சூதமுடனசோகந்தவள மலர்நீலமிவ்வையைந்துமே, மாரவேள்கணைகளாமிவைசெயுங்குணமுளரிமனதிலாசையையெழுப்பும், வினவிலொண்சூதமலர் மெய்ப்பசலையுண்டாக்கு மிகவசோகந்துயர்செயும், வீழ்த்திடுங்குளிர்முல்லை நீலமுயிர்போக்கிவிடு மேவுமிவைசெயுமவத்தை, நினைவிலதுவேநோக்கம் வேறொன்றிலாசையற நெட்டுயிர்ப்பொடுபிதற்றல், நெஞ்சந்திடுக்கிடுதலனம்வெறுத்திடல்காய்ச்ச லேனர்தன் மௌனம்புரிகுதல், அனையவுயிருண்டில்லையென்னவீரைந்துமாமத்தனே யருமைமதவேள், அநுதினமுமனதினினைதருசதுரகிரிவளரறப்பளீசுரதேவனே (௯௰)

மன்மதனுபகரணங்கள்.

வெஞ்சிலைசெழுங்கழைமலி ஞாணிகருவண்டின மேல்விடுங்கணை மலரதாம், வீசுதென்றல்தேர் பைங்கிளிகளேபரிகள் வேழம் கொட்டாதவிருளாம், வஞ்சியர்பெருஞ்சேனை கைதையுடைவாள்மண டிய வண்மைபெறுகடல்முரசமாம், மகரம்பதாகைகரு கோகிலங் காளம் மனைதேபெரும்போர்க்களம், சஞ்சரிசைவிசைபாடல் கு முதமேயன்கவிகை சசிரதியேமந்திரியாம், தறுகண்மடமாதரிள முலைமகுடமாமக்குல் தவறுதிருக்குபிடமாம், அஞ்சிகனைமாரவே ட்கெஸ்பவொளியோர்க்கெலா மழுதமேயருமைமதவேள், அனுதி னமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௬௪)

பகைகொளத் தகாதவர்.

மன்னவரமைச்சர்துர்ச் சனர்கோளர்துட்டரொடு மாறாததரும முடையோர், வலுவர்கருணீகர்பிரு பாகஞ்செய்தன்னமிடு மடை யர்மந்திரவாதியர், சொன்னமுடையோர்புலைய ருபதேசமதுசெ ய்வோர் குருவித்தியர்கவிகைகள், சொற்றிறப்பலவரிவர் பதினெந் துபேரொடுஞ் சொற்பனத்திலாகிலும், நன்மனதியறிந்தபோர்ப கைசெய்திடார்களிந் நானிலத்தென்பர்கண்டாய், நாரியோர்பாக னே வேதாகமப்பாவு நம்பனேயன்பர்நிதியே, அன்னமூர்பிரமனு ங் கண்ணனுங்காணாத வண்ணனேயருமைமதவேள், அனுதினமு.()

தொண்டுசெய்துபயன்கொள்வன.

சுவைசேர்கரும்பைவெண் பாலைப்பருத்தியைச் சொல்லுநன் னெல்லைகள்ளைத், தூயதெங்கின்கனியை யென்றுநதுட்டரைத் தொண்டரைத்தொழுதொழும்பை, நவைதிருமாறுகன் மடத்தேபய ன்கொள்வர் நற்றாம்பூக்கவிவாணரை, நலமிக்கசெழுமலரை யோவி யமெனத்தக்க நயமுள்ளநாரியர்தமைப், பவியீதிலுபகார நெஞ்ச ரைச்சிறுவரைப் போர்வீரரைத்தாயரைப், போதவம்பரிவோடிதந் செய்ய நிருபரைப் பகழ்பெறக்கொள்வர்கண்டாய், உவமைதவிர்த் தென்னையாட்கொண்டவள்ளலே யண்ணலேயருமைமதவேள், அ னுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே.(௬௬)

தருமம்.

பெறுபிள்ளைபெறுவித்தலொடுநாளோலைநாடொறும் பிள்ளைகளு க்கிடும்பால், பேசரியசத்திரமடமாவுரிஞ்சுகல்பெண் போகநாவிதன் வண்ணான், மறைமொழிகண்ணுமை தண்ணீர்தலைக்கெண்ணெய்பசுவாயிலு றையுமடக்கல், வாவிஞானபரப்பூட்டதின்பொருளடைக்காய்வ ழங்கன்னிகாதானம்புசவதல், சிறையுறுபவர்க்குசோறு வெற்றிலைகாத்த ல்பொழில்செய்தல்நாள் [illegible]லின்மனைக்கிறிஞ்சிலநீசுடன்பிச்சையறு சமயநீக்கண்மையதேவாலயங்கலவித்தல், [illegible]தகல்சத்ரேநர்க்கன்னதா பெட்டறங்களுமுனைத்தெசயலருமைமதவேள், அனுதினமும.()

இல்லறம்

தந்தைதாய்சற்குருவை யிட்டதெய்வங்களைச் சன்மார்க்கமுள மனவியைத், தவறாதசுற்றத்தையேவாதமக்களைத் தனைநம்பிவருவோர்களைச், சிந்தைமகிழ்வெய்தவே பணிவிடைசெய்வோர்களைத் தென்புலத்தோர்வறிஞரைத், தீதிலாவதிதியைப் பரிவுடைய துணைவரைத் தேனுவைப்பூசுரர்தமைச், சந்ததஞ்செய்கடனை யொன்றுமிவைபிழையாது தான்புரிந்திடவில்லறஞ், சாருநலமுடையராந் துறவறத்தோருமிவர் தம்முடன் சரியாயிடார், அந்தரியுயிர்க்கெலாந் தாய்தனினு நல்லவட் கன்பனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (கூரு)

புராணம்.

தலைமைசேர்பௌடிகமி லிங்கமார்க்கண்டமெழில்சாருர்வாமனமச்சமே, சைவம்பெறுங்கூர்மம் வரும்வராகங்கரந்தசரிதமேபிரமாண்டமும், நிலைமைசேரிப்பத்துமுயர்சிவபுராணமா நெடியமால்கதைவைணவம், நீதிசேர்காருட நாரதம்பாகவத நீடியபுராண நான்காங், கலைவலர்சொல்பதுமமொடு பிரமகைதவவமே கமலாலயன்காதையாங், கதிரவன்காதையேசூரியபுராணமாங் கனல்காதையாக்கிநேயம், அலைகொண்டநதியும்வெண் மதியுமறுகும்புனையு மத்தனேயருமைமதவேள், அநுதினமுமனதிநினை தருசதுரகிரி. ()

புகழ்ச்சி.

பருகாதவமுதொருவர் பண்ணுதபூஷணம் பாரின்மறையாத நிதியம், பரிதிகண்டலராத நிலவுகண்டுலராத பண்புடையபங்கேருகம், கருகாதபுயல்களை யருகாததிங்கள்வெங் கானிலுறையாதசீயம், கருதரியவிக்குணமனைத்துமுண்டானபேர் காசினியிலருமையாகுந், தெரியவுரைசெய்யின்மொழி கீர்த்திவருகல்வியொடு சீரிதயமீகைவதனத், திடமானவீரமிதை யென்றறிகுவார்களிச் செகமெலாங்கொண்டாடவே, அருள்கற்பதருவென்ன வோங்கிடுந்தானதுரை யாகுமெமதருமைமதவேள், அநுதினமுமனதினினை தருச. ()

திருமாலவதாரம்.

சோமுகாசுரனைமுன் வதைத்தமரர் துயர்கெடச் சுருதிதந்தருமச்சமாஞ், சுரர்தமக்கமுதீந்த தாமையாம்பாய்போற் சுருட்டிமாநிலமெடுத்தே, போமிரணியாக்கதனை யுயிருண்டேனமாம் பொல்லாதகனகனுயிரைப், போக்கியது நரசிங்க முலகளந்தோங்கியது புனிதவாமனமூர்த்தியாம், எழுறுமிராவணனை வென்றவனிராகவனிரவிகுலம்வேரறுத்தோன், எர்பரசிராமன்வரு கண்ணனெனுடபலராம னிப்புவிபயந்தவிர்த்தோர், ஆமினியகற்கியினி மேல்வருவதிவை பத்துமரிவடிவமருமைமதவேள், அநுதினமுமனதினினை த. ()

சிவமூர்த்தி.

பிறைசூடியுமைநேசன் விடையூர்திநடமிடும்பெரியனுயர்வதுவைவடிவன், பிச்சாடனன்காமதகனன்மறலியைவென்றபெம்மான் புரந்தகித்தோன், மறமலிசலந்தரனைமாய்த்தவன்பிரமன்முடிவௌவினோன்வீரேசுரன், மருவுநரசிங்கத்தை வென்றவானுமைபாகன் வனசரன்கங்காளனே, விறன்மேவுசண்டேசரட்சகன்கடுமாந்திமிக் கசக்கரமுதவினோன், விநாயகற்கருள்செய்தோன்குகனுமையுடன் கூடிமிளிரேகபாதன்சுகன், அறிவரியதட்சணாமூர்த்தியொடுலிங்கமாமையனேயருமைமதவேள், அநுதினமுமனதிநினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௯௯)

கவிவணக்கம்.

மலரிதழிபைங்குவளை மென்முல்லைமல்லிகை மருக்கொழுந்துயர்கூவிளம், மற்றுமுளவரசமலர் பத்திரஞ்சிலசூடி மணிமுடிதனிற்பொறுத்தே, சிலவெருக்கொடுவனத் துப்பூளைபச்சறுகு செம்முள்ளிமலர்சூடவே, சித்தம்வைத்திடவுமங்கீகரித்திடுமகா தேவதேவாதெரிந்தே, கலைவலருனைக்குநன் கவியொடம்பலவாண கவிராயனுக்குமென்புன், கவியையுஞ்சூட்டியே மனமகிழ்ந்திடுவதுன் கடனுக்குமடனுகமும், அலைபெருகுகங்கையுஞ் செழுமதியுமும்புனையு மமலனேயருமைமதவேள், அநுதினமுமனதினினை தருசதுரகிரிவள ரறப்பளீசுரதேவனே. (௱)

அறப்பளீசுரசதகம்

முற்றிற்று.